சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No:91/2020 Date: 15.11.2024

எதிர்மனுதாரரின் தரப்பு சாட்சி–3(Rw3) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர்செல்வம் | சாதி | : | -- |
| த/பெ | : | வேலுச்சாமி | சமயம் | : | -- |
| கிராமம் | : | எல்லீஸ் நகர் | தொழில் | : | முதுநிலை உதவியாளர் |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 48 |

முதல் விசாரணை –

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். விருதுநகர், ஊரக காவல்நிலைய குற்ற எண்.359/2019 ல் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை கணினி நகல் **எ.ம.சா.ஆ.3**. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சமயத்தில் சம்பவம் நடந்த ரோடு அரசியல் பிரமுகர் வருகையால் ஒருவழி பாதையாக மாற்றப்பட்டிருந்தது என்று எங்கள் விசாரணை அதிகாரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. அது சம்மந்தமாக நெடுஞ்சாலை துறை அதிகாரிகளை விசாரிக்கவில்லை

என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 இறுதி அறிக்கை தற்போதும் நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்படவில்லை என்றும், மனுதாருக்கு அழைப்பாணை எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கோப்பை சரிவர பார்வையிடமால் எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்த 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு என்பதால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.